## தமிழ்நாடு அரசு

### சுருக்கம்

பொதுப்பணிகள் – கல்வித் தகுதிகள் – தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களால் வழங்கப்படும் பி.ஏ. கார்பொரேட் செக்ரடாரிஷிப் கல்வித் தகுதியை CSSE –I –ல் உள்ள இளநிலை கூட்டுறவுத் தணிக்கையாளர் பதவிக்கு வரையறுக்கப்பட்டுள்ள கல்வித் தகுதிகளில் ஒன்றான பி.காம் பட்டப்படிப்பிற்கு இணையாக அங்கீகரித்து ஆணை வெளியிடப்படுகின்றது.

- - - - - - - - - - - - - - - - - - - - -

நிதி (கூட்டுறவு தணிக்கை)த் துறை

அரசாணை (நிலை) எண்.303 — நாள்: 27.05.2004

திருவள்ளுவர் ஆண்டு 2035
தாரண, வைகாசி – 14

படிக்கப்பட்டது:

1. கூட்டுறவுத் தணிக்கை இயக்குநரின் கடித எண்.நக.52035/2002/தேஉ.3, நாள்: 1.2.2002.
2. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடித எண். 7978/ஆர்.என்.டி.எஃப்1/01, நாள்: 30.12.2003.

-----

ஆணை:-

மேலே படிக்கப்பட்ட முதல் கடிதத்தில் தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களால் பி.ஏ. கார்பொரேட் செகரடாரிஷிப் கூட்டுறவு தணிக்கைத் துறையில் தற்காலிக விதிகளின் விதி 8(பி)யின்படி, இளநிலை கூட்டுறவு தணிக்கையாளர் நேரடி நியமனத்திற்கு பி.காம் அல்லது பி.ஏ (கூட்டுறவு) அல்லது பி.ஏ (பொருளாதாரம்) பட்டப் படிப்பிற்கு இணையாக கருதலாமா எனக் கூட்டுறவுத் தணிக்கை இயக்குநர் அரசளவில் உரிய ஆணை பிறப்பிக்குமாறு கருத்துரு அனுப்பியுள்ளார்.

2) பி.ஏ கார்பொரேட் செக்ரடாரிஷிப் பட்டப்படிப்பை பி.காம் பட்டப் படிப்பிற்கு இணையாக அங்கீகரிப்பதற்கு பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்த துறை அரசாணை (நிலை) எண்.441, (பணி ஆர்) நாள். 20.12.1993–ல் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவரை தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்ட இணைக்கல்வித் தகுதி நிர்ணய பரிசீலிப்புக் குழுவின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு, அந்தக் குழுவும் 18.12.2003 அன்று நடந்த குழுக் கூட்டத்தில் தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்களால் வழங்கப்படும் பி.ஏ கார்பொரேட் செக்ரடாரிஷிப் பட்டப்படிப்பை இளநிலை கூட்டுறவுத் தணிக்கையாளர் பதவிக்கு வரையறுக்கப்பட்டுள்ள கல்வித் தகுதிகளில் ஒன்றான பி.காம் பட்டப்படிப்பிற்கு இணையாக கருதலாம் என்று தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் பரிந்துரைக்குழு பார்வை இரண்டில் கண்ட கடிதத்தில் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது.

3) குழுவின் பரிந்துரையை அரசு தீவிர பரிசீலனைக்குப்பின் ஏற்றுக்கொள்ள முடிவெடுத்துள்ளது. அவ்வாறே, தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களால் வழங்கப் படும் பி.ஏ., கார்பொரேட் செக்ரடாரிஷிப் கல்வித் தகுதியை பொதுப்பணிகளில் வேலைவாய்ப்பிற்காக அப்பல்கலைக் கழகங்களால் வழங்கப்படும் பி.காம் பட்டப் படிப்பிற்கு இணையான கல்வித் தகுதியாக கருதலாம் என ஆணையிடுகிறது.

4) இது குறித்த தற்காலிக விதிகளில் தகுந்த விதித் திருத்தம் வெளியிட பிரேரனை தனியாக அரசுக்கு அனுப்பி வைக்குமாறு கூட்டுறவுத் தணிக்கை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ந. நாராயணன்,
வளர்ச்சி ஆணையர் மற்றும் செயலாளர்.

பெறுநர்
கூட்டுறவுத் தணிக்கை இயக்குநர், சென்னை 600 005.
நகல்:- 1. செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை-2.

....2

நகல்:- (முன் பக்க தொடர்ச்சி...)

2. பதிவாளர்,
சென்னை பல்கலைக்கழகம்.

3. பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்த்திருத்த (ஆர்5நி) துறை,
சென்னை 600 009.

4. முதலமைச்சர் அலுவலகம்,
தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.

5. கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை,
சென்னை 600 009.

6. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்,
சென்னை 600 010.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.
4.6.04